சொல்லாதே யாரும் கேட்டால்....
இன்று..
டாக்டர், என் பிள்ளை பேசுவானா? மத்த பசங்கள மாதிரி மறுபடியும் மாறுவானா? என்ன ஆச்சுன்னே தெரியல... நீங்க தான் ஏதாவது பண்ணி என் பிள்ளையை காப்பாத்தணும் என்று டாக்டரின் கைகளை பற்றிக்கொண்டு கதறிக்கொண்டிருந்தார் கதிரின் தந்தை. Mr சண்முகம், முதலில் எனக்கு எல்லாவற்றையும் சொல்லுங்கள். எப்பொழுதிலிருந்து இவ்வாறு இருக்கிறான்? வேறு எந்த டாக்டரிடமாவது காட்டினீர்களா? என்ன நடந்ததென்று சொல்லுங்கள் என்று கேட்க.. ஒன்னும் தெரியல டாக்டர்... பெங்களூர்ல வேலை பண்ணிண்டு இருந்தான். ஒரு வாரத்திற்கு முன்னாடி எனக்கு உடனடியா வரும்படி போன் வந்தது. நான் அங்க போய் பார்த்த பொழுது பதறி போயிட்டேன்.. இப்படியே பிரம்மை பிடிச்சா போல உட்கார்ந்த்துண்டு இருந்தான். எந்த அசைவும் இல்லை.. நான் பேசியது எதுவும் அவன் புரிந்தது கொண்டிருப்பானான்னு கூட என்னால புரிஞ்சிக்க முடியல. இவன் கூட ஒரு பையன் இருந்தான். இவனோட ரூம் மேட். அவன் தான் என்னை கூப்பிட்டது. நான் அவனிடம் கேட்டேன்.. என்னப்பா என்ன நடந்தது.. உங்களுக்குள் ஏதாவது சண்டையா? இல்லை காதல்.. கீதல்ன்னு... என்று கேட்டதற்கு.. ஒண்ணும் தெரியாது அங்கிள். நேத்திக்கு நைட் வேலைவிட்டு வரும் பொழுதே ஒரு மாதிரியாக தான் இருந்தான். என்ன என்று கேட்டேன். பதில் சொல்லவில்லை. சாப்பிடவில்லை.. ஒரு செகண்ட் கூட கண்ணை மூடவில்லை.. அப்படியே உட்கார்ந்தவன் தான்.. எனக்கு பயமா இருந்ததால தான் உங்களை வரச்சொன்னேன்..என்று நிலேஷ் கூற நான் கதிரை அவனை அழைத்துக்கொண்டு சென்னை வந்து விட்டேன். எதையாவது பார்த்து பயன்திருப்பானோ என்று கோவிலுக்கு சென்று மந்திரித்து எல்லாம் பார்த்தேன். இந்த 8 நாள்ல ஒரு தடவை கூட நான் கண் அசைத்து பார்க்கவில்லை டாக்டர் என்று கண்ணீருடன் சண்முகம் கூற.. டாக்டரோ கவலை படாதீங்க Mr சண்முகம், இது ஏதோ அதிர்ச்சியினால் உண்டானதுன்னு தெரியுது... ஒண்ணும் பிரச்சனை இல்லை.. எல்லாம் சரியாயிடும்..நீங்க கவலை படாதீங்க.. என்று தைரியம் கூறினார். என்னமோ டாக்டர் உங்களை தான் நம்பி இருக்கேன். எனக்கடுத்தது இந்த குடும்பத்தை காப்பாத்த இவன் ஒருவன் தான் இருக்கான்... என்று உடைந்தது அழுது கொண்டே அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்தார்....இத்தனைக்கும் கதிரிடம் இருந்து எந்த ஒரு அசைவும் இல்லை.. கண்கள் திறந்தபடியே உட்கார்ந்திருந்தான். அவன் கண்களில் ஒரு பயம்.. ஒரு ஏக்கம்.....
டிசம்பர் 18
முத்து என்ன யோசிக்கிறே? ஏதாவது பேசுடா.. நீ இப்படியே பேசாம இருந்தா நான் கிளம்பி போயிடுவேன்.. போ டா போ.. நான் அவ்வளவு சொல்ல சொல்ல நீ என்னை விட்டுட்டு வேற ரூமுக்கு போனல.. அப்படியே போகவேண்டியது தானே.. என்ன பாக்க ஏண்டா வந்தே.. நான் இருக்கான இல்ல செத்துட்டனான்னு பார்க்க வந்தியா? இல்லைட நீ தான் என்னை கொஞ்சம் கொஞ்சமா சாக அடிக்கற... இப்படி வாழறத்துக்கு பதிலா.. பேசாம நான் செத்து போயிடலாம்.. நீயாவது சந்தோஷமா இரு.. நான் வரேன்.. கதிர்.. கதிர்... போடா போ.. நீயா என்னை பார்த்து பேசனும்ன்னு நெனைச்சா கூட இனிமே பேச முடியாது...நான் போறேன்டா.. என்று கூறி கதிருன் முன்னே போய் நிற்க.. கண்களில் கண்ணீருடன்.. அப்படி நீ போறதா இருந்தா.. உனக்கு முன்னாடியே நான் போயிடுவேண்டா.. போடா.. நீ எப்பவுமே என்னை புரிஞ்சிண்டது கிடையாது.. எல்லாம் தெரிஞ்சா மாதிரியும் புரிஞ்ச மாதிரியும் பேசறதோட சரி..உன்கூட இருந்த இந்த இரண்டு வருடம் எப்படி என்பது நம்ம ரெண்டு பேருக்கும் தான் தெரியும் முத்து.. இவ்வளவு தெரிஞ்சும் நீ என்னை தப்பு சொல்லறது எனக்கு வலிக்குது டா.. பழகி போச்சின்னு இருக்க முடியல.. சரி.. நீ இப்ப ரொம்ப கோவமா இருக்க.. நாளைக்கு நான் உன்னை மீட் பண்ணறேன்.. என்னை மன்னிச்சிடுடா.. ஏதாவது சொல்லி உன் மனதை புண்படுத்திருந்தால்.. நான் வரேன்.. கதிர் மறையும் வரை முத்துவின் கண்கள் அவனை விட்டு அகலவில்லை.. கோவம் அவன் கண்களில் தெரிந்தது.. கதிரின் முகம் மறைந்ததும்.. முத்துவின் கோவம் எல்லாம் அழுகையாக

மாறியது..அவனுடைய அழுகை.. கேட்போரையும் கரைய வைக்கும்... கதிரே கேட்டிருந்தால்.. கண்டிப்பாக மனம் மாறியிருப்பன்...அழுகை விசும்பலாக முத்து தன் தலையணையில் முகம் புதைத்து... பழைய நினைவுகளில் மூழ்கினான்...
அது ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.. முத்துவும் கதிரும் தங்களை போல் மற்ற நூற்றுக் கணக்கான முதல் ஆண்டு மாணவர்களை போல தங்கள் பால்ய கனவுகளை கலைத்து விட்டு இளமை கனவுளை காண கல்லூரியில் தங்கள் வாழ்க்கையை தொடங்கிய முதல் நாள்.... முத்து, கதிர் இருவருமே நடுத்தர வர்கத்து பிள்ளைகள் தான். முத்து பி காம்இலும் கதிர் இயற்பியலிலும் சேர்ந்திருந்தனர். இவர்கள் அறிமுகம்...பாருங்களேன்... கல்லூரி கான்டீன்... என்ன தம்பி 500 ரூபா குடுக்கற..
சில்லறைய இல்லையா? 2 டீக்கு 500 ரூபா குடுத்தா எப்படி.. என்று முத்துவிடம் சொல்ல அருகிலிருந்த யாரிடமும் சில்லறை இல்லாததால் மச்சி வாட சில்லற மாத்திண்டு வரலாம் என்று அவன் தன் சகாக்களிடம் சொல்ல..அந்த கும்பலில் முத்துவின் வகுப்பில் படிக்கும் வசந்த்தின் நண்பனான கதிர்...வசந்த் அவன்கிட்ட குடுடா.. வெளியே போய் சில்லறை மாத்திக்கலாம்.. என்று சொல்லும் போதே... நன்றி தோழா.. வெளியே வந்து சில்லறை மாத்தி தரேன் என்று கூறிக்கொண்டே.. கதிரின் கைகளிலிருந்து எடுத்துக்கொண்டான்.. வசந்த்... டேய் லூசா டா நீ? உனக்கு யாருன்னே தெரியாது.. என் டிபார்ட்மெண்ட் நு தான் தெரியும்.. அவன் திருப்பி தருவான மாட்டானானு தெரியுமா? போ போ.. வந்தா லாபம் தான். இனிமே உன்னை தான் புல்லா மீட்டர் போடுவானுங்க பாத்துடா.... சரி போலாம் வா.. என்று கதிரின் கைகளை பிடித்துக்கொண்டு.. முத்து கோஷ்டியுடன் வெளியே சென்றான்... சொன்ன படியே முத்துவும் சில்லறை மாற்றி கதிரிடம் பணத்தை குடுக்க வாங்கிக்கொண்டு.. வசந்த்தும் கதிரும் பேருந்து நிறுத்தத்தை அடைந்தனர்..
முதல் நாள் ஆகையால் ஒரு சில முகங்களை தவிர எல்லாமே புது முகங்கள். அனைவர் முகத்திலும் ஒருவித எதிர்பார்ப்பு. ஒரு தேடல். யார் யாருடன் நட்பு பாராட்டுவர் என்பது படைத்தவன் மட்டுமே அறிந்த ஒரு ரகசியம். ஒரு சில மாணவர்களோ மனிதரை கண்டால் மிரளும் மான் போல மிரட்சியை தங்கள் கண்களில் வெளிப்படுத்திக்கொண்டு அமைதியாய் பட்டும் படாமலும் தனியே நின்றிருந்தனர். கதிர் அவர்களை போல் ஒருவன் என்றாலும் அவனுடைய பள்ளி சிநேகிதன் வசந்த் அவனுடன் இருந்தது கதிருக்கு ஒரு தெம்பையே தந்தது. கதிர் மிகவும் மேன்மையானவன். இறக்க குணம் உள்ளவன். அன்பையே தெய்வமாக மதிப்பவன். இரைந்தது பேசமாட்டான். வசந்த் இதே போல் என்றாலும் கொஞ்சம் தைரியம் அதிகம். பேருந்து நிலையத்தில் நின்றிருந்த முத்து கோஷ்டியும் வசந்த் மற்றும் கதிரும் ஒரே பேருந்தில் ஏற வசந்த் முத்துவிடம் முத்து வீடு எங்க உனக்கு? கலெக்டர் நகர் என முத்து கூற.. உனக்கு மச்சி...இது முத்து வசந்திடம்.. அம்பத்தூர் என வசந்த் கூற.. ஒரு அறிமுக படலம் அரங்கேறியது. கதிர் எல்லாவற்றையும் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தான். முத்து கதிருக்கு நேர் எதிர்.. எப்பொழுதும் எங்கும் எதுவும் அவனை முன்வைத்தே இருக்கவேண்டும் என்னும் எண்ணம் உடையவன். ஒரே பையன். கொஞ்சம் செல்லம் அதிகம். அவன் கேட்டு இதுவரை இல்லை என்று அவன் பெற்றோர் சொன்னதே கிடையாது. அதனால் தான் நடுத்தர குடும்பமாக இருந்தாலும் சக்திக்கு மீறி 500 முத்து கேட்டதும் அவன் பெற்றோர் கொடுத்தது. இறங்கும் முன் முத்து வசந்த்திடம் மச்சி நாளைக்கு காலையிலே எனத்தான மணி பஸ்சுக்கு டா வருவே? நானும் அதே பஸ்சில வரேன்..7 :10 டா..ஓகே மச்சி பாய்..முத்து இறங்க.. அவனையும் அறியாமல் கதிர் அவனை பார்த்துக்கொண்டிருந்தான். இந்த தொடக்கம் இம்மையிலே மறக்கவேண்டும் என்று நினைத்தாலும் முடியாத பல துயரங்களுக்கு முதல் படி என்பதை யார் தான் அறிந்திருப்பார்.. எல்லாம் அவன் திருவுளம்.
சில மாதங்கள் நகர்ந்தன.. இப்பொழுது அனைவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள ஆரம்பித்து நட்பை உறுதி செய்துகொள்ள தொடங்கிய நேரம். ஆம் கதிரும் இப்பொழுதெல்லாம்

கொஞ்சம் நிறையவே பேச ஆரம்பித்து விட்டன என்றால் பாருங்களேன். கதிரின் இந்த மாற்றம் வசந்த்திற்கு சந்தோஷத்தை தந்தாலும் ஏதோ ஒரு பயம் அவன் அடிமனதில் உண்டானது. முத்துவினுடைய அந்த வால்தனம் அவனை சுற்றியிருக்கும் அனைவரையும் சந்தோஷமாக வைத்திருக்கும் அந்த குணம் கொஞ்சம் கொஞ்சமாக கதிருக்கு முத்துவின் மேல் ஒரு ஈர்ப்பை உண்டாக்கியது.முத்து கண்ணன் என்றால் கதிர் பலராமன்... கலரை சொன்னேன் சார்.. முத்து கரியநிறமே என்றாலும் வசீகரமான முகம். ஒல்லியான தேகம் ஆனால் உடற்பயிர்ச்சியினால் மேலும் செதுக்கப்பட்ட தேக்கு கட்டை போல இருந்தது. கூரிய கண்கள்.. என இருக்க.. கதிரோ வெள்ளைத்தோல்.. ஒல்லியான தேகம் மென்மையானவன்... இப்பொழுதெல்லாம் ஒருநாள் முத்துவை பார்க்கவில்லை என்றாலும் கதிருக்கு அந்த நாளே போகாது என்றாகிவிட்டது. ஆனால் இதை யாரிடம் சொல்ல முடியும்? இதென்ன காதல்ல? ஒரு ஆண்மகன் மேல் அதுவும்... கதிர் கொஞ்சம் குழம்ப ஆரம்பித்தான். ஆனால் முத்துவோ அதை போல் எதுவும் நினைத்தாற்போல தெரியவில்லை.. நாட்கள் நகர்ந்தன.. இறைவர்கள் இருவருக்குமான ஈர்ப்பு வெளிப்படும் நாளும் வந்தது..
அன்று காலை வழக்கோம் போல முத்து கலெக்டர் நகர் நிறுத்தத்தில் ஏற வசந்த்தை பார்த்த முத்து ஹாய் மச்சி..என்று கூறிக்கொண்டே ஏறி நேராக சென்று அவன் மடியில் உட்கார.. வசந்த் ஹாய் டா.. என்று வழக்கம்போல நடந்து கொண்டான். அதுவரை எப்பொழுதும் போல இருந்த முத்து மச்சி கதிர் எங்கடா? தெரியல டா வெயிட் பண்ணி பார்த்தேன். வரலே.. டைம் ஆயிடிச்சு அதனால தான் வந்துட்டேன்..இது வசந்த்... ஒஹ்.. ஏதோ ஒரு நெருடல் இருந்தாலும் அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.. நண்பர்களுடன் பேச கொஞ்சம் கொஞ்சமாக தன நிலையை அடைந்தான். மறுநாளோ முத்து பேருந்தில் ஏறியவுடன் வசந்தும் வரவில்லை கதிரும் வரவில்லை என அறிந்து தன நண்பர்களுடன் அமர்ந்து கொண்டான். மனம் தேடலானது.. கொஞ்சம் கொஞ்சமாக அமைதியை அவன் அறியாமலே இழந்தான்.. அவன் முகத்தில் மெல்லிய சோகத்தின் இழைகள் படர ஆரம்பித்தன.. இதை யாரும் உணர முடியவில்லை.. முத்துவாலும் தான்... அன்றைய நாள் போவதே பெரிய காரியமாக இருந்தது முத்துவிற்கு... கல்லூரியில் மட்டுமா.. வீட்டிலும் தான்.. விடியும் வரை காத்திருந்தான்... அவசர அவசரமாக பேருந்து நிறுத்தத்தை அடைந்தான். பேரூந்தில் ஏறிய அவன் கண்களில் ஆயிரம் தேடல்.. வசனத்தை கண்டதும் சிறு நிம்மதி.. ஹாய் மச்சி என்று வாஞ்சையுடன் அவனை கட்டிகொண்டான்..(நீங்க நினைக்கிறா போல இல்ல சார்..) இது பஸ்ஸில் நின்றுகொண்டிருந்த வசனத்தை.. கல்லூரி மாணவர்களுக்கே உண்டான ஸ்டைலுடன்... ஆனாலும் அவன் கண்களும் நெஞ்சமும் எதையோ தேடியது..
ஆனாலும் அவன் கண்களும் நெஞ்சமும் எதையோ தேடியது..யாரையோ எதிர்பார்த்தது... கேட்க நினைத்தும் வார்த்தைகள் தொண்டையிலேயே சிக்கிக்கொண்டது.. கண்கள் பனிக்கும் பொழுது.. வசந்த்.. என்ன மச்சி டென்ஷன்ஆ இருக்கியா? ஏன் இப்படி உடம்பு நடுங்குது..ஒன்னும் இல்லடா.. பஸ் ஆடுதுல.. என்று மழுப்பி.. மச்சி கதிர் எங்கடா? என்ற அவனுடைய கேள்வியில் அவ்வளவு ஆதங்கம் புதைந்துகிடந்தது.. வசந்த்.. மச்சி அவனுக்கு டை பாயிட் டா.. என்று கூறியவுடன்.. முத்து நெஜமாகவே கொஞ்சம் நடுங்கி போய்விட்டான்...
அவனுள் ஏதோ ஒரு உந்துதல்.. இப்பொழுதே கதிரை பார்க்கவேண்டும் என்று.. எப்படி.. அவனால் மேலே உட்கார முடியவில்லை.. கொஞ்சம் கொஞ்சமாக அவன் செஞ்சு துடிக்க ஆரம்பித்தது. அவன் மனதில் என்ன என்ன எண்ணங்கள் ஓடியது என்று அவனாலேயே சொல்ல முடியாது.. அதற்குள் கல்லூரியும் வந்தது.. முத்துவின் மனம் பாடத்தில் சிறிதும் லயிக்கவில்லை. அவனுடைய நிலையை பார்த்து இரண்டு பாட வேலைகள் முடிந்தபின்... முத்து.. என்னடா ஆச்சு.. காலைலேர்ந்து ஒரு மாதிரியா இருக்கே? உடம்பு சரியில்லையா? பஸ்ஸிலே ஏறும் பொழுது நல்ல தானே இருந்தே? என்ன ஆச்சு? முத்து பதில் சொல்லாமல்.. தன்னையே பார்த்து கேட்டுக்கொண்டான்.. எனக்கு என்ன ஆகியது? நான் ஏன் இப்படி இருக்கிறேன்? அவனிடம்

கேட்கப்பட்ட கேள்விகளிலேயே மிகவும் கஷ்டமான கேள்வி இது தான் போல.. தெரியிலடா மச்சி .. இ பீல் டு ஹெவி.. கிளம்பலாமா? வசந்த்.. சரிட நானும் கதிரை பார்க்க போறேன் என்றானே தாமதம்.. நானும் வரேண்டா.. கதிரை நானும் பார்க்க வேண்டும்.. மற்ற நேரமாக இருந்தால் வசந்த் முத்து சொன்னதை இவ்வளவு சீரியஸ்ஆக நினைத்திருக்க மாட்டான். இதுவரை ஏனோ தானோ என்றிருந்த முத்து சட்டென்று மாறியது வசந்த்திற்கு எங்கோ உரைத்தது. சரிடா வா போகலாம்.. என்று இருவர் மட்டும் கல்லூரியை விட்டு கிளம்பினர்... யாரிடமும் சொல்லிக்கொள்ளவில்லை.. பேருந்து அம்பத்தூரை அடையும் வரை.. இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.. முத்துவின் மனம் முழுக்க முழுக்க சஞ்சலத்தில்.. வசந்தோ குழப்பத்தில்.. அம்பத்தூரில் இறங்கி கதிரின் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். முத்து தன நெஞ்சு இப்படி அடித்துக்கொள்வதை இதுவரை அனுபவித்ததில்லை.. உணர்ந்ததில்லை.. ஏதோ ஒரு சோகம் ஒருபுறம்.. ஆவலும் சந்தோஷமும் மறுபுறம்... கதிரின் வீட்டை அடைந்த பொழுது.. முத்து உள்ளே வர சிறிது தயங்கினான்.. வசந்த்... முத்து உள்ளே வா.. என்று கூற.. குரல் கேட்டு கதிரின் அம்மா வந்து இருவரையும் உள்ளே அழைத்து சென்றாள்... படுக்கையில் கதிரை பார்த்த முத்துவின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக விழ.. இதை வசந்த் கவனிக்க.. இவர்கள் இருவரையும் கதிர் பார்க்க.... வாடா வசந்த்.. ஹாய்.. முத்து.. வா என்று ஈனஸ்வரத்தில் கதிர் அழைத்தது.. முத்துவை இன்னும் சோகத்தில் ஆழ்த்தியது...முத்துவின் கண்ணீர் வசந்தின் மனதில் எண்ணற்ற எண்ணச்சிதறல்களை உண்டாக்கியது. குழப்பம் அதிகரித்தது.. டாய் நான் போய் தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன் என்று கூறி அங்கிருந்து வெளியேற

டாய் நான் போய் தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன் என்று கூறி அங்கிருந்து வெளியேறினான்.. உண்மையில் அதற்கு தானா...? முத்துவும் கதிரும் ஒருவரை ஒருவர் பார்த்தவாறே இருந்தனர்.. இருவர் கண்களிலும் கண்ணீர்.. முத்துவிற்கு கதிரின் நிலை பார்த்து.. கதிருக்கு முத்துவை பார்த்த சந்தோஷம்... கண்களிலேயே பேசிக்கொண்டனர்.. இருவர் பார்வையும் ஓராயிரம் வார்த்தைகள் பேசின...அந்த ஆயிரம் வார்த்தைகளும் கடைசியில் நாம் என்ற ஒரு வார்த்தையாக... முத்து கதிரின் கைகளை பற்றி ஆறுதலாக தடவிக்கொடுத்தான். கதிரும் ஏதோ ஜென்ம சாபல்யம் அடைந்தது போல ஒரு நிம்மதி பெரு மூச்சு விட்டு.. வசந்த் வருவதை பார்த்து தன் கைகளை விலக்கிக்கொண்டான். என்ன டா சத்தமே இல்லை... என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்த வசந்த்... ஏதும் புரியாதவனாய்.. மச்சி கிளம்பலாமா என்று முத்துவிடம் கேட்க.. முத்துவும் சரிடா... என்று சொல்லிவிட்டு.. கிளம்பினர்.. கதிர் இருவரையும் பார்த்து தேங்க்ஸ் டா.. என்று கண்ணீருடன் சொல்ல.. இட்ஸ் ஓகே என்றவாறே வசந்த் முத்துவை அழைத்துக்கொண்டு கிளம்பினான். அம்பத்தூர் பேருந்து நிலையத்தை அடைந்தனர்.. முத்துவின் கண்ணீர் பற்றி எந்த கேள்வியும் வசந்த் இதுவரை கேட்கவில்லை.. வந்த இவ்வாறெல்லாம் யோசிக்க காரணம்.. முத்துவின் இயல்புதான்.. எப்பொழுதும் வாழ் பையானாக இருப்பவன் இன்று காலை முதல் இப்படி இருப்பது என்பது.. நம்ப முடியாத ஒன்று... வசந்த் தன் மனதில்.. சரி கொஞ்சம் விட்டு பிடிக்கலாம்.. என்று எண்ணிக்கொண்டே.. மச்சி பஸ் கிளம்புதுடா என்று சொல்ல.. முத்துவும் ஓகே மச்சி நான் இந்த பஸ்லயே கிளம்பறேன் என்றவாறே அந்த பேருந்தில் ஏறிக்கொண்டான்...இப்பொழுது.. மூவரும் மூன்றுவித மனநிலையில்.. வெவேறு உலகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தனர்

இதுவரை தான் வாழ்க்கையில் அடையாத ஒரு சந்தோஷம்.. இதுவரை தான் வாழ்க்கையில் அனுபவித்திராத ஒரு புது உணர்வு..இதுவரை தன் வாழ்க்கையில் நடக்காத மற்றும் நினைக்காத ஒரு நிகழ்வு.. இவைகளால் இனம் புரியாத மயக்கத்தில் முத்து. தன்னை பார்க்கவந்தது மட்டுமல்லாமல் முத்துவின் கண்களின் கண்ணீர் கதிருக்கு உரைத்த முத்துவின் உள்ளம் என சந்தோஷத்தில் கதிர்.. முத்துவின் மாறுதலான செய்கைகள்.. கதிரை பார்த்ததும் அவன் வடித்த கண்ணீர்.. அவர்கள் தனியே இருந்த பொழுது ஆட்கொண்ட மௌனம்.. என.. வசந்த்.. முத்துவினால் நிஜமாகவே குழம்பி போனான். இதில்.. வசந்த் இவ்வளவு குழம்ப காரணம்... கதிர் என்னுடைய நண்பன்.. என்ற பொசசிவ் நேச்சர் தான் காரணம். ஆனாலும் அவன் பொறுத்திருந்து

பார்க்க நினைத்து எப்பவும் போல இருக்க முயற்சி செய்தான். நாட்கள் நகர்ந்தன.. இப்போதெல்லாம் முத்துவிடம் அந்த வால்தனம் மிகவும் குறைந்திருந்தது. வசந்த் வேண்டும் என்றே நான் கதிர் வீட்டிற்கு போகிறேன் என்று சொன்னாலும்.. முத்து நான் வரலடா.. கதிர் எப்படிருக்கன்னு சொல்லு போதும்.. என்னுடைய ஹாய் சொல்லிடு என்று சொல்லிவிட்டு போய்விடுவான். இது வசந்தை மேலும் குழப்பியது. ஆனால் முத்துவின் இந்த மாற்றம் நாள்பட எல்லோராலும் கவனிக்க பட்டது. அவன் பெற்றோர் உட்பட.. ஒரு நாள் முத்துவின் அப்பா.. அவனை அழைத்து கேட்டேவிட்டார். அதற்கு முத்து ஏதேதோ சாக்கு சொல்லிவிட்டு நகர்ந்தான். ஓர் மாதத்திற்கு பிறகு கதிர் முதல் முறையாக கல்லூரி வந்தான். கலெக்டர் நகர் நிறுத்தத்தில் அவன் கண்கள் முத்துவை தேடியது.. கதிரின் இந்த தேடலை வசந்தின் கண்கள் கவனித்தது. முத்துவும் வந்தான். கதிரை கண்டான்... ஒரு உணர்ச்சி போராட்டத்தை எதிர்பார்த்த வசந்த் உண்மையிலேயே ஏமாற்றம் அடைந்தான். கதிரோ.. முத்துவோ புதியதாக எதுவும் செய்யாமல் எப்பவும் போல இருந்தனர். கதிரும்.. தான் மாறிய நிலையிலிருந்து மீண்டும் மாறவில்லை...ஆனால் கதிரும் முத்துவும் கண்களால் பேசிக்கொண்டனர்... தங்கள் எண்ணங்களை, விருப்பு வெறுப்புகளை.. நட்பை... இருவரும் இப்பொழுதெல்லாம் பேசுவதையே குறைத்துவிட்டனர்.. தங்களுக்குள் வாழத் தொடங்கினர்.. நாட்கள் நகர நகர.. மானசீகமாக இருவரும் வாழத்தொடங்கினர்.. ஒருநிலையில் பேசியே ஆகவேண்டும் என்ற நிலைக்கு வந்த பொழுது..

இருவர் மனதிலும் ஒரே எண்ணம். எப்படி? இருவருக்கும் உள்ள ஒரே தடை வசந்த். அவனுக்கு தெரியாமல் எப்படி? எங்கு? இந்த ஏக்கம் தொடர தொடர.. இருவரின் மனமும் ஒரு முறையேனும் சந்திக்க விழைந்தது...இடையிடையே ஏன் இப்படி? எதனால் இப்படி? நான் ஏன் அவனுக்காக இப்படி துடிக்க வேண்டும்? யார் அவன்? இந்த உறவுக்கு என்ன அர்த்தம்? இது எங்கு போய் முடியும்? என்ற கேள்விகள் இருவர் மனதிலும் தொடர்ந்து எழவே... அந்த வார இறுதியில் சந்திப்பதென்று இருவரும் மனதில் நினைத்துக்கொண்டு விடியலுக்காக காத்திருந்தனர்.. பேருந்தில் முத்து ஏறியவுடன் நேராக வசந்த்தை நோக்கி வந்தான் முத்து.. ஹாய் டா...வசந்த்... ஹாய் மச்சி... ஒரே ஹாய் மாயம்.. இந்த சந்தோஷத்திற்கும் காரணம் இல்லாமல் இல்லை. வசந்தின் அருகில் அமர்ந்திருந்த கதிரும் நேரம் பார்த்து காத்திருந்தான். கல்லூரி வாசலில் இறங்கும் சமயம் வசந்த்தை முன்னால் விட்டுவிட்டு கதிரும் முத்துவும் பின்தங்கினார்.. ஒரே நேரத்தில் இருவரும் ஒரு காகிதத்துண்டை மாற்றிக்கொள்ள எத்தனித்த பொழுது வியப்பில் ஆழ்ந்தனர்.. அவசர அவசரமாக காகித துண்டுகளை மாற்றிக்கொண்டு இறங்கினர்..இருவர் மனதிலும் ஒரு சந்தோஷம். கல்லூரிக்குள் விரைந்தனர். படித்ததும் ஆச்சர்யத்தில் மூழ்கினர்.. இரண்டு காகித துண்டுகளிலும் இருந்தது ஒரு வாசகங்கள் தான். இந்த ஞாயிற்றுக்கிழமை அண்ணாநகர் டவரில் மாலை 5 மணிக்கு சந்திப்போம்... இதுதானோ.. ஈருடல் ஓருயிர் என்பது? இருவரும் ஒருமுறை கூட ஆசையாக பேசியது கூட இல்லையே? செம்புலமும் நீருமாயினர் இருவரும்.. என்ன ஒரே அக்கேள்வி.. யார் அந்த செம்மண் நிலம் யார் அந்த நீர்? இதுவரை தன் வேலையை ஒழுங்காக செய்து கொண்டிருந்த கதிரவனும் கடிகாரமும் வேலை நிறுத்தம் செய்தது போல ஒரு உணர்வு இருவருக்கும்.. நாட்கள் செல்வதே பெரும் பாடாய் இருந்தது. பொறுமையின் எல்லையை அடைந்துவிட்டோமோ என்று இருவரும் எண்ணத்தொடங்கினர். வெகு சிரமத்துடன் மீதிநாட்களை கழித்தனர். ஞாயிறும் வந்தது. நெஞ்சில் படபடப்பு.. ஒரு துடிப்பு. ஒரு துள்ளல்.. ஒரு வாஞ்சை.. என்னதிது.. என் நண்பனை தானே பார்க்கப்போகிறேன். அதற்கு ஏன் இத்தனை இல்லை மறை காய் மறை வேலைகள்.. ஒருவேளை இது தவறோ.. இல்லை இல்லை தவறில்லை.. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்.. வள்ளுவரே சொல்லியிருக்கிறார்.... பின் நான் ஏன் வசந்திற்கு தெரியாமல் இதை செய்யவேண்டும்? ஆம் ஞாயிறு காலை முதல்.. இருவரின் மனமும் இதையே மாறி மாறி அசை போட்டுக்கொண்டிருந்தன..

சரி இந்த ஒருமுறை அவனை தனியாக பார்க்கலாம்.. அடுத்த முறை.. வசந்த்தையும் கூப்பிடலாம் என்று எண்ணிக்கொண்டே வீட்டை விட்டு இருவரும் கிளம்பினர்... கதிர் தவறை அடைந்த பொழுது முத்து அவனுக்காக வாயிலில் காத்திருப்பதை பார்த்தான். இப்பொழுது இருவர் நெஞ்சிலும் ஒரு பதற்றம்.. தெரு முனையில் கதிரை பார்த்த முத்து அவனை நோக்கி நடந்தான். இருவரும் பரஸ்பரம் ஹாய் டா.. சொல்லிக்கொண்டு.. அமைதியாயினர்... மௌனம்.. மௌனம்..மௌனம்.. மணித்துளிகள் மெல்ல கரைந்தன..மெதுவாக நடந்துகொண்டிருந்த இருவரும் ஒருவரை ஒருவர் நோக்க.. முத்து கதிர் உள்ளே போய் உட்காரலாம என்று கேட்க.. சரிடா வா என்று இருவரும் தங்கள் நடையின் வேகத்தை அதிகரித்து உள்ளே சென்று அமர்ந்தனர்.. அப்பொழுதான் மக்கள் வர ஆரம்பித்ததால் கூட்டம் அவ்வளவாக இல்லை.. மீண்டும் மௌனம்...கலைத்தான் முத்து.. கதிர் என்னன்னு தெரியலடா.. என்னமோ போல இருக்கு.. எனக்கு எவ்வளவோ நண்பர்கள் இருக்காங்க.. ஆனா நான் எப்பவுமே இப்படி இருந்ததில்லை... நீ இல்லாதப்ப தான் எனக்கு ஏதோ போல இருந்தது.. ரெண்டு மூணு நாள் பார்க்கவில்லேன்னா உடனே ஏதோ போல இருந்தது..

ஏண்டா இதெல்லாம்.. முத்து.. உன்னை பார்த்த முதல் நாளே உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிடிச்சு... யார் மேலயும் இல்லாத ஒரு தனி அன்பு.. ஆசை உன்மேல வந்தது. .. ஆனா அதை நான் உன்கிட்ட கூட காட்டியதில்ல.. எல்லாத்துக்கும் மேல நாம ரெண்டு பேரும் இதை வெளிய சொன்னா முடிஞ்சிது கதை... அதனாலேயே நான் மறைத்தேன்.. ஆனா உன்னை பார்க்காமல் என்னால் இருக்கவே முடியாதுடா.. இதை சொல்லும் பொழுது கதிரன் கண்களின் ஓரத்தில் கண்ணீர்.. இதுநாள் வரை அவன் தன் மத்தில் வைத்திருந்த எண்ணங்களை அவனிடம் அன்று கொட்டி தீர்த்தான். இதை கேட்டுக்கொண்டிருந்த முத்து பேச்சையும் மறந்து தன் சுவாசத்தையும் மறந்து உலகை மறந்து தன்னை உண்மையாக நேசிக்கும் ஒரு ஜீவனின் வார்த்தைகள் வழியே சிந்திய சாக வரம் தரும் தேன் அமுதை பருகிக்கொண்டிருந்தான். இடையே கதிர் தன் பேச்சை நிறுத்தவே இவ்வுலகிற்கு வந்தவனாய் கண்களில் ஆனத கண்ணீருடன் கதிர்.. நீ முதல் நாளிலிருந்து அனுபவித்ததை.. நான்.. நீ இல்லாத ஒவ்வொரு கணமும் அனுபவித்தேன்... எனக்கு நீ வேண்டும் கதிர்.. என் வாழ்நாளெல்லாம்... உன்னை இழந்தால் நான் செத்துவிடுவேன்... என்று கூறி அவனை கட்டிப்பிடித்துகொண்டான்.. இருவர் கண்களிலும் கண்ணீர்.. இது ஆனத கண்ணீரா.. அல்லது எதிர்காலத்திற்கான ஒத்திகையா?

காலம் தான் பதில் சொல்லும்

இவர்களது உணர்ச்சி கொந்தளிப்பில் வார்த்தைகள் குழறுவதும்.. மௌனமும்.. கண்ணீரும்.. நமக்கு அதிகமாக சொல்லவில்லை என்றாலும் முத்துவும் கதிரும் நிறையவே அறிந்தும் புரிந்தும் கொண்டனர்.. பூங்காவில் இருள் கவ்வ ஆரம்பித்தது.. ஆனால் இவ்விருவருக்கோ இவர்கள் வாழ்வில் இப்பொழுதான் அன்பென்னும் ஒளி பொழிய ஆரம்பித்தது... மீண்டும் எப்போது எங்கு சந்திப்பது.. முத்து.. வசந்த்.... என்று ஆரம்பித்த கதிரிடம்... எனக்கும் அதே தாண்டா பயம்.. என்ன பண்ணறதுன்னு தெரியல..

என்று கூற..முத்து நாம பண்ணறது சரியா தப்பா? எதுக்கு நாம ரெண்டு பேரும் இப்படி ஒளிஞ்சி ஒளிஞ்சி பாக்கணும் பேசனும்? என்று கேட்க.. சிறிதே ஆச்சர்யத்துடன்.. கதிர் நீ சொல்லறது சரி தான்.. சரி முதல்ல நாம வசந்த் கிட்டே சொல்லுவோம்.. அவன் என்ன பண்ணறான்னு பார்க்கலாம்.. பிறகு மத்ததை பற்றியெல்லாம் யோசிக்கலாம்..என்ன சொல்லற என்று முத்து கேட்க.. கதிரும் தன் இசைவை சொல்ல பிரிய மனமில்லாமல் இருவரும் தங்கள் வீடு போய் சேர்ந்தனர்... இப்பொழுது நெஞ்சில் ஒரு பாரம் ஏறியது போல ஒரு உணர்வு.. இருவருக்கும்.. பின்ன... ஒருவரை தங்கள் இதயத்தில் சுமப்பதென்பது அவ்வளவு எளிதா என்ன?? ஆனாலும் அது ஒரு சுகமான சுமை.. இதில் வலி இருக்காது ஆனால் வலிமை இருக்கும்...இந்த எல்லை கடந்த நட்பின் ஆரம்பம் இவர்கள் வாழ்வில் என்றும் அழியாத ஒரு கதைக்கு முன்னுரை..கதிரை தன் மனதில் சுமந்து கொண்டு முத்து தன் வீட்டை அடைந்தான். இரவு உணவு உண்டபின்.. தன்

படுக்கையில் தன் அன்பு நண்பனை எண்ணி மகிழ்ந்து கொண்டு..ஆனந்தத்தில்.. அவனுடைய நினைவுடனேயே தலையணையில் தன் முகம் புதைத்தான்...
டிசம்பர் 19

இரவு முழுவதும் அழுது கொண்டிருந்ததால் முகம் வீங்கி இருந்தது... தலைவலியும் சேர்ந்ததால் அவனால் எழுந்து கொள்ள முடியவில்லை.. இருந்தும் வலுக்கட்டாயமாக எழுந்து கொண்டான்.. வெளியே சூரியன் பிரகாசமாக இருந்தாலும்.. இந்த உலகமே இருண்டதாகவே அவனுக்கு தெரிந்தது.. எதையும் செய்ய அவனுக்கு மனமில்லை.. அப்படியே அமர்ந்திருந்தான்.. மீண்டும் கண்களில் கண்ணீர்.. கடைசியாக கதிர் பேசிய வார்த்தைகள் அவன் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது.. ஆமாம் கதிர்.. நான் எந்த அளவு உன்னை கஷ்டபடுத்தியிருந்தால் நீ இவ்வாறு செய்திருப்பாய்.. ஆனால் நீ என்னைவிட்டு போனது எனக்கு கொடுத்த மிகப்பெரிய தண்டனை.. இதை என்னால் தாங்க முடியவில்லை.. எப்படி முடிந்தது உன்னால்..? இனி நான் எதற்க்காக உயிர் வாழ வேண்டும்? நீ இல்லாத இந்த வாழ்க்கை.. இனிமேலும் என்னால் வாழ முடியாது...ஒன்று நீ என்னிடம் வரவேண்டும் அல்லது நான் இந்த உலகத்தை விட்டு செல்லவேண்டும்... இந்த எண்ணங்களுடன் படுக்கையை விட்டு எழுந்த முத்து கடகடவென வெளியே கிளம்பினான்.. இப்பொழுதிருக்கும் மனநிலையில் அது எங்கே என்று யாரால் சொல்ல முடியும்? அதே நேரம்.. கதிரோ.. முதுவை விட்டு வந்த பின்பு இரவு முழுவதும் தூங்காமல் அழுதுகொண்டே இருந்தான்... இந்த பிரிவை இவர்கள் இருவரும் கனவிலும் கூட நினைத்திருக்க மாட்டார்கள்... குறிப்பாக கதிர்... முத்துவிர்க்காகவே வாழ்ந்தவன்.. இப்பொழுது அவனை விட்டு பிரிய நேர்ந்ததால் நிலை குலைந்திருந்தான்.. இந்த முடிவு அவனுடையது தான் என்றாலும் அவனால் தாங்க முடியவில்லை.. முத்துவிற்கு நாட்கள் என்றால் கதிருக்கு மணித்துளிகள்.. பிரிவின் வலி அவ்வளவு கொடுமையானது.. அதுவும் கருதொருமித்த இருவரின் பிரிவு ஆற்ற அடங்காது...கதிரும் இப்படி ஒரு வாழ்க்கை எனக்கு இனி தேவையா? எல்லாம் முடிந்தது... என்னால் இந்த வலியை தாங்க முடியாது... போதும்..ஏழேழு ஜென்மங்களுக்கு இது போதும்... அன்பு இனிமையானது தான்.. ஆனால் பிரிவு மரணத்தை விட கொடுமையானது.. அதைவிட மரணம் ஆட்கொண்டால் அதைவிட இனிதேது?... இந்த எண்ண பின்னல்களுடன் இருவரும் ஏதோ ஒரு முடிவுடன் வீட்டை விட்டு கிளம்பினர்..
இன்று...
Mr சண்முகம்.. உங்க பையனோட ரூம் மேட் நான் பாக்கணுமே.. அப்பறம்.. உங்க பையனுக்கு நெருங்கிய நண்பர்கள் இருந்தால் வரச்சொல்லுங்கள்.. கொஞ்சம் ஹெல்ப்புல்லா இருக்கும் என டாக்டர் சொன்னவுடன்.. கண்டிப்பா வர சொல்லறேன் டாக்டர்.. இவனுக்கு ஒரே ஒரு க்ளோஸ் பிரண்டு இருக்கான்.. அவனும் பெங்களூர்ல தான் இருக்கான்... நான் போன் பண்ணி வர சொல்லறேன்.. என்றார். தாய்க்கு மட்டும் தானா தலை மகன்.. தலை மகன் வீட்டிற்கும் அல்லவோ... டாக்டர்... அப்சர்வேசன்க்கு உங்க பையன் இங்கேயே இருக்கட்டும்.. ஒன்னும் பயப்படாதீங்க.. இது ஒரு பெரிய விஷயமே இல்லை.. எல்லாம் சரியாயிடும்.. என டாக்டர் சொல்ல.. அவ்விடத்தை விட்டு விலக மனமில்லாமல் கதிரின் அப்பா வீட்டிற்கு கிளம்பினார். வாசல் வந்த உடனேயே நிலேஷ்க்கு போன் செய்து விவரத்தை சொல்லி வரசொன்னார்.. அவனும் வருவதாக கூற.. அடுத்து முத்துவிடம் பேச அவனுடைய எண்ணை எடுத்தார்.. மனதில் ஒரு நெருடல்.. கூப்பிட்டே ஆகவேண்டுமா? மீண்டும் அவனிடம் நான் எப்படி.....?!!!
இவ்வளவிற்கும் காரணமே அவன் தானே..... அவனை போய்...மனதில் தன் எண்ணங்கள் ஒரு சிறு சண்டையிட வெற்றி பாசத்திற்கு.. எனக்கு என்மகன் தான் முக்கியம் இப்பொழுது.. என்று ஒரு முடிவுக்கு வந்தவராய்.. முத்துவின் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டார்...மறு முனையில் "இந்த எண் சுவிச் ஆப் செய்யப்பட்டுள்ளது என்று கன்னடத்திலும் ஆங்கிலத்திலும் வர.. மீண்டும் மீண்டும் முயற்சி செய்தார்.. எந்த பலனும் இல்லை.. சரி வீட்டிற்கு சென்று முயற்சி செய்யலாம் என

அங்கிருந்து கிளம்பினார்.. இப்பொழுது நிஜமாகவே கதிரின் அப்பா பயத்துடன் குழப்பமும் அடைந்தார்... பொருமையையை கொஞ்சம் கொஞ்சமாக இழக்க... தொடர்ந்து முயற்சி செய்ய ஆரம்பித்தார்.. மறுமுனையில் அதே.. நிலை... என்ன செய்ய? என்ன ஆகியது.. ஒருவேளை... சேச்சே.. அப்படியெல்லாம் இருக்காது... அப்பறம் ஏன் முத்துவோட போன் சுவிச் ஆப் ஆகியிருக்கு... கடவுளே இது என்ன சோதனை? ஒண்ணும் புரியவில்லையே... என நிலையிழந்து நின்றார்...அடுத்தது என்ன? குழப்பத்திலிருந்து மனம் தெளிந்தால் தானே யோசிக்க முடியும்.. பார்ப்போம்....
வெளியே கிளம்பிய முத்து எங்கு போவதென்று தெரியாமல் அங்கு வந்த பேருந்தில் ஏறிக்கொண்டு கிடைத்த ஓர் இருக்கையில் அமர்ந்தது கொண்டான்.. அவன் அமர்ந்திருந்த அந்த இருக்கை...அவனுடைய பழைய நினைவுகளுக்கு அவனை அழைத்து சென்றது.. ஆம் நம்முடைய கடந்த காலம் தான் நமக்கு ஆறுதல் தரும் ஒரு அருமருந்து....முத்து கண்களை மூடினான்.. இவ்வுலகை மறந்தான்..
அன்று கல்லூரிக்கு செல்வது சொல்லமுடியாத ஆனந்தத்தை தந்தது இருவருக்கும்.. கதிர் எப்பொழுதும் இல்லாத சந்தோஷத்துடன் இருப்பதை பார்த்த வசந்த்.... என்னடா.. ரொம்ப சந்தோஷமா இருக்கே.. என்ன விஷயம்.. என வினவ.. கதிரோ..ஒண்ணும் இல்லையே.. ரொம்ப ப்ரெஷ்ஷா பீல் பண்ணறேன்.. அவ்வளவுதான் என்றான்.. வழியில் ஏறிக்கொண்ட முத்துவும் சில நாட்களாக தான் இருந்த நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு தன் பழைய நிலையில் பேசியது.. அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. இருவரின் மாற்றமும் வெளிப்படையாகவே தெரிய... அனைவரும் சந்தோஷ பட்டனர்.. வசந்த்தை தவிர.. கல்லூரிக்குள் நுழைந்தனர்.. வசந்திற்கு இருப்பு கொள்ளவில்லை.. முத்துவிடம் என்ன மச்சி ஒரே சந்தோஷமா இருக்கே..என்னடா.. பிகர் ஏதாவது ஐ லவ் யு சொல்லிச்சா..என கேட்க.. முத்துவோ.. இல்லைடா.. ஆனா நான் எதிர்பார்க்காதது கிடைத்திருக்கிறது.. கொஞ்சம் பொருடா.. சொல்லறேன்.. என சொல்ல.. வசந்த் சந்தேகம் அதிகமாக... தன் நிலையை இழக்க ஆரம்பித்தான்... அன்று மதியம் முத்துவும் கதிரும் வசந்த்திடம்.. மதிய உணவிற்கு உணவகம் கூப்பிட.. தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவலில் அவர்களுடன் சென்றான்.. அங்கு.. கதிர்.. வசந்த் சின்ன வயசிலிருந்து என்ன உனக்கு தெரியும்.. எனக்கிருக்கும் ஒரே நண்பன் நீ தான். என்னுடைய சந்தோஷமானாலும், துக்கமானாலும் நீ என்னுடன் இருந்திருக்கிறாய்.. இப்பொழுதும் கூட...
என்னுடைய இந்த சந்தோஷத்தை முதலில் உன்னிடம் சொல்லவே உன்னை கூப்பிட்டேன் என சொல்ல.. வசந்த்திற்கு தலை சுற்றியது.. என்ன டா சொல்லற.. என பதறி கேட்க.. வசந்த்.. நீ எப்படி எடுத்துப்பேன்னு தெரியல ஆனா இது உண்மை... முத்துவை நான் அதிகமாக நேசிக்க ஆரம்பிச்சுட்டேண்டா.. அவனும் தான்.. என சொல்ல.. தலையில் பேரிடி விழுந்தார் போல.. என்னடா உளர்ற.. என கத்த.. முத்து அவனை உட்காரவைத்து.. இதிலே என்னடா தப்பு.. பொதுவான வார்த்தையிலே சொல்லறதுன்ன இன்டிமேட் பிரண்டு... அதுக்கு ஏன்டா.. நீ இப்படி கோவபடர என கேட்க.. நீ சும்மா இருடா என சொல்லிவிட்டு..
கதிர் என்னடா.. நீ ஒரு கே மாதிரி பேசற... புரிஞ்சி தான் பேசறையா.. இல்ல.. லூசு ஏதாவது புடிசிடுச்சா.. உங்க ரெண்டு பேரையும் ரொம்ப நாலா நான் பார்த்துண்டு தான் இருக்கேன்.. ஒரு மாதிரியாத்தான் இருந்தீங்க.. போடா..
என்று எழுந்து போக எத்தனிக்க.. முத்து அவனை உட்கார வைத்து.. வசந்த்.. இன்டிமசி அவ்வளவு தப்பா டா? நீ சொல்லரா மாதிரி நாங்க கேவும் இல்ல... எதுவும் இல்ல.. இதே ஏண்டா நீ இப்படி தப்ப பேசற.. என்று கேட்க.. நீ மூடுடா...கதிர்.. இதெல்லாம் ஒத்துவராது.. நண்பர்களா இருக்கறது தான் நல்லது.. இப்படிஎல்லாம் பேசினேன்னு வெச்சுக்கோ.. பசங்க ரொம்ப அசிங்கம் பண்ணிடுவானுங்க.. அப்பறம் உன் இஷ்டம்... கதிர்.. டேய்.. மதத்தவன பத்தி எனக்கு கவலை இல்லடா...நீ என்னோட பிரண்டுன்னு தான் உன்கிட்டே சொன்னேன்.. இன்பாக்ட் சொன்னோம்.. நீ எங்கள புரிஞ்சிப்பேன்னு நெனைச்சோம்.. சரி விடு டா.. சாப்பிடலாமா.. பசிக்குது.. என்று கதிர்

சொல்ல அனைவரும் சாப்பிட்டுவிட்டு கிளம்பினர்.. வீடு சென்று சேரும் வரை.. யாரும் எந்த வார்த்தையும் பேசவில்லை.. கதிருக்கு கை அசைத்துவிட்டு முத்து இறங்கினான்.. எதுவும் சொல்லாமல் வசந்த் இறங்கி வேகமாக வீட்டிற்கு சென்றுவிட்டான். கதிருக்கு தர்ம சங்கடமாக இருந்தது.. ஒருவேளை சொல்லாமல் இருந்திருக்கலாமோ என நினைத்துக்கொண்டே வீட்டை அடைந்தான். யார் என்ன நினைக்கிறார்கள் என நமக்கு எப்படி தெரியும்.. மறுநாள் காலை.. பேருந்து நிலையத்தில் கதிர் காத்திருக்க வசந்தை காணவில்லை.. கதிர் வழக்கம் போல கல்லூரிக்கு கிளம்பினான்.. வழியில் முத்துவும் வந்து சேர்ந்து கொண்டான். ஆனால் அங்கு யாரும் அவ்வளவாக இவ்விருவரிடமும் பேசவில்லை... ஆனால் எப்பொழுதும் போல பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் வந்தனர்.. முத்துவும் கதிரும் கூட.. அமைதி காத்தனர்.. இருவருக்கும் அடுத்து என்ன நடக்கப்போகிறது என்ற பயம்... அது அவர்கள் முகத்தில் தெளிவாக தெரிந்தது..

இதில் உண்மை என்னவென்றால்.. கதிரோ.. முத்துவோ ஓரினசேர்க்கையாளர்கள் இல்லை என்பது முழு உண்மை.. ஆனால் அவர்கள் இருவரது அன்போ/ காதலோ அதுவும் உண்மை....

பொதுவாகவே இந்த சமுதாயம் இரண்டையும் ஒத்துக்கொண்டது கிடையாது.. எதிர்த்து வாழ்ந்தவர்களும் கிடையாது.. கோப்பெருன்சொழனையும் பிசிராந்தையாரையும் பற்றி படிக்கும் பொழுது மட்டும் அத்யந்த நட்பை பற்றி வாய்கிழிய பேசுவார்கள்.. ஆனால் அதுவே உண்மையானால் எதிர்ப்பார்கள்..(நான் சொன்னது உண்மையான நட்பை பற்றி.. இதில் காமம்.. இல்லை)

கல்லூரிக்குள் சென்ற கதிருக்கும் முத்துவிற்கும் ஒரு பேரதிர்ச்சி.. வசந்த் ஏற்கனவே அங்கு வந்திருந்தான்.. கதிர்.. நேராக அவனிடம் போய் எப்படிட வந்தே என்று கேட்டதற்கு.. என் பிரென்ட் என்னை காலைலேயே விட்டுட்டு போயிட்டாண்டா என்றான்.. ஏதும் வருத்தம் காட்டாமல் முத்துவும் கதிரும் அவரர் வகுப்புகளுக்கு சென்றனர்.. வசந்த் பஸ்ஸில் வருவதை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்தான். கதிரை விட்டு விலக ஆரம்பித்தான்.. ஆனால் அவன் உள்நோக்கம் வேறுவிதமாக இருந்தது என்பது பிறகு தான் அனைவருக்கும் தெரிந்தது.. முத்துகூட இருந்த நண்பர்களில் சிலர் இப்பொழுது வசந்த்துடன்... ஆனால் இந்த மாறுதல்களால் மகிழ்ந்தவர்கள் முத்துவும் கதிரும் தான்.. எந்த பிரச்சனையும் இல்லாமல் மிக மிக நெருங்கி வந்தனர் உடலால் அல்ல.. உள்ளத்தால். கருதொருமித்தனர்.. இருவரும் ஒருவரை மற்றொருவர் தங்கள் பெற்றோரிடம் அறிமுகம் செய்து வைத்தனர்.. இவர்கள் அன்பை கண்டு பொறாமை படாதவர்கள் என்று யாரும் இல்லை... இந்த சந்தோஷத்துடனேயே அவர்களின் முதல் வருட படிப்பும் முடிந்தது.. முத்துவும் கதிரும் எல்லா பரிக்ஷைகளிலும் முழுமையாக தேறி இருந்தனர்.. வசந்தோ இரண்டு பாடங்களில் அரியர்ஸ் வைத்தான்... இரண்டாம் வருடம்... முதல் நாள்..அனைவரும் சந்தித்துக்கொண்டனர்.. கதிரும் முத்துவும் மற்றவர் எண்ணங்களில் கண்டிப்பாக மாறுதல் இருக்க வேண்டும் என்று ஆவலுடன் சென்று பேசினர்.. ஏமாற்றமே மிஞ்சியது.. வசந்தோ இப்பொழுதெல்லாம் இவ்விருவரையும் கண்டுகொள்வதே இல்லை.. இவர்களாக சென்று பேசினாலும் பேசமாட்டான்.. இப்படியே நாட்கள் நகர்ந்தன.. ஒருநாள் அரசல் புரசலாக ஒரு செய்தி.. கதிரும் முத்துவும் ஹோமோ என்று.. இது இவர்கள் காதிலும் எட்டியது... ஆரம்பத்தில் இதை பற்றி பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.. ஆனால் கொஞ்சம் நாளிலேயே.. இவர்கள் இருவரையும் நேரிடையாகவே கொச்சைபடுத்தி பேச ஆரம்பித்தனர் கல்லூரியில்.. இவ்விருவரும் ஒன்னும் புரியாமல் முழித்தனர்.. எப்படி இது.. நாம் அப்படி என்ன இவர்கள் கூறும் படி நடந்து கொண்டோம்.. இது யாருடைய வேலையாக இருக்கும்? குழம்பினர்.. அதே குழப்பத்தோடு ஒருநாள் வீடு சென்றனர்.. அங்கேயோ இவர்களுக்கு இதைவிட அதிர்ச்சி காத்திருந்தது...

இருவர் வீட்டிலும் பெற்றோர்கள் ஒருவித தயக்கத்துடனும் கோவத்துடனும் இருந்தனர்.. உள்ளே நுழைந்த கதிருக்கும் முத்துவிற்கும் ஒன்றும் புரியவில்லை... ஏன் இப்படி இருக்கிறார்கள் என்று.. இந்தபக்கம் கதிரின் அப்பா.. கதிர்.. நாங்க கேள்வி படறது என்ன.. நாங்க நம்பல.. நீயே

சொல்லு..கதிரோ அப்பா நீங்க என்ன கேட்கறீர்கள்..நேராகவே கேட்கிறேன் கதிர் உன்னையும் முத்துவையும் பற்றி வெளியே கூறுவது எல்லாம் பற்றி தான்.. தலை சுற்றி விழாத குறை தான் கதிருக்கு.. வீடு வரை விஷயம் வந்துவிட்டதே.. அவன் தன் பெற்றோரை நோக்கி அப்பா அவர்கள் பேசுவதெல்லாம் அவர்கள் எண்ணங்கள்.. நானும் முத்துவும் நெருங்கிய நண்பர்கள்..
நெறிதவறியோ.. முறைதவறியோ இதுவரை நாங்கள் நடந்தது இல்லை.. அந்த எண்ணமும் எங்களுக்கு இல்லை... யார் எங்களை நம்பினாலும் நம்பாவிட்டாலும் நீங்கள் எங்களை நம்பினால் போதும்... இவ்வளவு கேவலமான ஒருவிஷயத்தை என்னோட அப்பா வாயிலேர்ந்து நான் கேட்டதற்கு பதில் நீங்களே என்னை தண்டிசிருக்கலம்பா என்றான்.. கதிர்.. உண்மஏலேயும் முத்து மேலயும் எங்களுக்கு முழு நம்பிக்கை உண்டு.. ஆனால் இந்த விஷயத்தை எங்களுக்கு சொன்னது வசந்த்.. எப்படி எங்களால் சும்மா இருக்க முடியும்? என்று சொல்ல.. வேறு வழி இல்லாமல் கதிர் தன் பெற்றோரிடம் நடந்த அனைத்தையும் சொன்னான்.. இதில் என்ன தவறு என்று நீங்களே சொல்லுங்கள் என்று சொல்ல... அவனுடைய அப்பா.. நான் நம்பறேண்டா உன்னை..இனி யார் என்ன சொன்னாலும் எங்களுக்கு கவலை இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே.. முத்துவும் அவன் பெற்றோரும் அங்குவந்து சேர்ந்தனர்...அவர்களை உள்ளே அழைத்து உபசரித்தனர்.. கதிர் சொன்னதையே முத்துவும் சொன்னதை கேட்ட இரு குடும்பத்தாரும் ஒருமனதாக அவர்களை முழுமையாக நம்பினார்...யார்களால் இரு குடும்பமும் இப்பொழுது ஒன்றானது.. தங்கள் பிள்ளைகளின் வார்த்தைகளை நம்புவதும்.. தங்கள் பிள்ளைகளை நம்புவதும் ஒரு பெற்றோருடைய கடமை என்பதை உணர்ந்தவர்கள் போல..
மறுநாள் இருவரும் மிகுந்த தைரியத்துடன் கல்லூரிக்கு சென்றனர்.. அவர்களை அவ்வாறு கண்ட வசந்திற்கு ஒரே அதிர்ச்சி.. ஒன்றும் புரியாமல் முழித்தான்.. அவன் சகாக்களும் தான்.. கதிரும் முத்துவும் நேராக வசந்த்திடம் சென்று.. ஹாய் மச்சி.. எப்படிடா இருக்கே.. ரொம்ப தேங்க்ஸ் டா.. நாங்களே சொல்லனும்னு நினைத்திருந்தா கூடா இவ்வளவு சுலபமா சொல்லி இருக்க மாட்டோம்.. ஆனா நீ அதை ரொம்ப சுலபமாக்கிட்டே.. இதுக்கு மேல எங்களுக்கு என்னடா வேண்டும்.. யார் என்ன சொன்னாலும் பரவாயில்லை.. கடைசியா உனக்கு ரொம்ப ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் என்று இருவரும் கூறிவிட்டு தங்கள் வகுப்பறையை நோக்கி சென்றனர்..அதிர்ச்சியில் உறைந்து உட்கார்ந்திருந்த வசந்த்தை பார்த்து என்னடா மச்சி.. என்ன ஆச்சு என்று கேட்க ஒண்ணும் இல்லடா.. என்று கூறிக்கொண்டே வகுப்பறையை நோக்கி நடந்தான்... வசந்த் அவசர அவசரமாக கதிரின் வகுப்பறையை நோக்கி ஓடினான்.. உள்ளே நுழைய இருந்த கதிரை நோக்கி.. கதிர் நான் உன்கிட்டே பேச வேண்டும் வா என்றான்.. கதிரோ.. மதியம் பேசலாம் இப்ப வேண்டாமே..என்று சொல்ல.. இல்லடா நான் உன்கிட்டே தனியா இப்பவே பேசனும்னு சொல்ல.. இருவறேன்னு சொல்லிட்டு.. நேராக முத்துவை பார்த்து சொல்லிவிட்டு வசந்த்துடன் விளையாட்டு மைதானத்திற்கு சென்றான். அங்கு இவ்விருவரை தவிர யாரும் இல்லை. கதிர் சாரி டா. எல்லாத்துக்கும் நான் தான் காரணம்.. என்னை மன்னிச்சிடு.. என்று சொல்ல.. அது சரி வசந்த்.. நீ ஏன் இவ்வாறெல்லாம் செய்தாய்? நாங்க என்னடா கெடுதல் செய்தோம் உனக்கு.. உன்னை தானேடா நாங்க ரெண்டு பேருமே ரொம்ப க்ளோஸ் பிரண்டுன்னு நேனைச்சிண்டிருந்தோம்.. ஆனா நீ.. கதிர்.. நீன்னா எனக்கு உயிர் டா.. எனக்கு உன்னைவிட்டா வேற யாரும் கிடையாது.. என்னை புரிஞ்சிண்ட ஒரே ஆள் நீ தாண்டா.. உண்மையை சொல்லனும்னா சின்ன வயசிலிருந்து உன்னை அணுஅணுவா ரசிச்சிருக்கேன்.. நீ எனக்கு தான்.. எனக்கு மட்டும்தான்னு இருந்தேன்.. முத்து திடீர்ன்னு நடுவிலே வந்ததால எல்லாம் மாறிபோயிடுச்சு..எனக்கு நீவேணும் டா எல்லாத்துக்கும்.. என்று கெஞ்சாத குறையாக கேட்க... கதிரோ... வசந்த்.. நீ எப்போதுமே என்னுடைய உயிர் நண்பன் தான்.. நம் உறவு வேறு எனக்கும் முத்துவுக்கும் உள்ள உறவு வேறு.. அவன் என்னுடைய உயிர்.. நீ என்னுடைய கண்.. வித்யாசம் இருக்கில்லையா? என்று புரிய வைத்தான்..ஆனால் வசந்த் அந்த மன பக்குவத்தை அடையாதவனாகவே இருந்தான்... வசந்த் கண்களில் கண்ணீருடன் நின்றிருந்தான்..

இப்பொழுது அவனுக்கு உண்மையிலேயே இந்த உலகம் சுற்றியது.. நிஜமாகவே மயங்கி விழுந்தான் ....
தூரத்தில் சென்று கொண்டிருந்த சில மாணவர்களை உதவிக்கு அழைத்து அவனை நினைவுக்கு கொண்டுவருவதற்குள் கதிர் ஒருமாதிரியாகவே ஆகிவிட்டான்.. அதற்குள் விஷயம் கேட்டு முத்து அங்கு வர கதிர் எல்லா விஷயங்களையும் அவனிடம் சொன்னான்.. கதிர் வசந்திற்கு சொன்ன அந்த பதிலை கேட்டு முத்துவிற்கு அப்படியே கதிரை கட்டி அனைத்து ஒரு முத்தம் குடுக்க வேண்டும் போல இருந்தது.. ஆனால் நிலைமையை கருத்தில் கொண்டு இருவரும் வசந்த்தை அருகில் இருந்த ஒரு மருத்துவ மனைக்கு அழைத்து சென்று காண்பித்தனர்.. வெயிலினால் தான் என்று அறிந்ததும் நிம்மதி அடைந்த கதிரும் முத்துவும் அவனை அவனுடைய வீட்டிற்கு அழைத்து சென்றனர். வழியெல்லாம் வசனத்தின் புலம்பல்... இதை எல்லாம் கேட்டுக்கொண்டே வந்த முத்து முதல் முறையாக தான் கதிருக்கும் வசந்த்திர்க்கும் இடையே வந்ததாக என்ன ஆரம்பித்தான்.. எல்லாம் சிறிது நேரம் தான்.. வசந்த் வீட்டிற்குள் அவனை இருவரும் அழைத்து சென்றனர்...விவரத்தை சொன்னார்கள்.. இருவரும் அங்கிருந்து கிளம்பினார்கள்.. இவ்வளவிலும் முத்துவிற்கு வசந்த்தின் ஒரு வார்த்தை உள்ளூர உறுத்திக்கொண்டிருந்தது..எல்லாத்துக்கும் நீ வேணும் டா எனக்கு... என்ற அந்த வார்த்தைகள் மட்டும்.. எல்லாத்துக்கும்.. எல்லாத்துக்கும்... அப்ப.. வசந்த்......இருக்குமா? தெரியலையே.. கொஞ்சம் குழம்பினான். இதை கதிரிடமும் சொன்னான்.. இப்பொழுது தான் கதிரும் அதை உணர ஆரம்பித்தான்..
இதை பற்றி தெரிந்து கொள்ள இருவருமே விரும்பினர் ஆனால் மெனக்கெடவில்லை.. நாட்கள் நகர்ந்தன.. வசந்தும் இயல்பு நிலைக்கு திரும்பினான். இருந்தாலும் ஒரு சோகம் எப்போதுமே அவன் முகத்தில் தெரிந்தது..இதன் நடுவில் கதிரும் முத்துவும் கொடைக்கானல் போகலாமென்று முடிவு செய்ய வசந்த்தை கேட்க அவனோ வரவில்லை என்று சொல்லிவிட்டான். மற்ற சில நண்பர்களுடன் இவர்கள் கொடைக்கானல் சென்றனர்.. அவர்கள் வாழ்கை நாடகம் அரங்கேறப்போவது கூட தெரியாமல் இருவரும் கொடைக்கானல் அடைந்தனர்.... முன்பதிவு செய்யப்பட 4 அறைகளில் ஒரு அறையில் முத்துவும் கதிரும்.. மற்ற மூன்று அறைகளில் மற்ற மாணவர்கள்.. அனைரும் தங்கள் அறைகளை அடைந்தனர். தங்கள் அறையை அடைந்த கதிரும் முத்துவும் கதவை அடைத்துவிட்டு ஆசை தீர ஒருவரை ஒருவர் கட்டி அணைத்து தங்கள் நெடுநாளைய ஆசையை தணித்துக்கொண்டனர்..
அன்று வெளியே எங்கும் செல்லாமல் விடுதியிலேயே இருந்தனர்..சிறிது நேர ஓய்வுக்கு பிறகு அனைவரும் சந்தித்துக்கொண்டனர்.. மறுநாள் நிகழ்ச்சிகளை பற்றி முடிவு செய்துவிட்டு இரவு உணவையும் முடித்து விட்டு தங்கள் அறைகளை அடைந்தனர்.. கூதல் அதிகமாக இருந்ததால் ஒரு கதகதப்பு தேவைப்பட்டது..அனைவருக்கும்.. இவ்விருவருக்கும் தான். ஒரு பெரிய கட்டில் அது. நடுவே இருவரும்.. ஒரு போர்வைக்குள்.. எந்தவித விகல்பமும் இல்லாத நினைவுகளுடன்.. அருகருகே படுத்திருந்தனர்.. சற்றே திரும்பி இருவரும் ஒருவர்மேல் ஒருவர் தங்கள் கைகளை போட்டுக்கொண்டனர்.. கண்கள் மூடின..
ஆனால் நினைவுகள் தூங்கவில்லை.. எத்தனை நாள் ஏக்கமோ தெரியாது.. இந்த ஒன்றரை வருடத்தில் இவர்கள் இவ்வளவு தனிமையை கண்டதே கிடையாது... கருதொருமித்தவர்களின் முதல் ஏக்கம் தனிமை.. அந்த தனிமையே அவர்களுக்கு இனிமை.. அந்த இனிமையை சுவைக்க ஏக்கம் இருக்காதா என்ன? ஒருவர் மேல் ஒருவர் போட்டிருந்த கைகளினால் இருக்கிக்கொண்டனர்.. இடைவெளியை குறைத்தனர்.. இருவரும் முகத்தோடு முகத்தை இழைத்தனர்.. இதழோடு இதழை வருடினர்.. காற்றும் இடையே புகாத படி கட்டி அனைத்து மகிழ்ந்தனர்.. இதுவரை இருவரும் எந்தவிதமான சுகமும் அனுபவித்ததில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை..இதழோடு இதழ் சேர்த்து தங்கள் உமிழ்நீரால் உயிர்களை கரைத்து மாற்றிக்கொண்டனர்.. முத்தத்தால் மோகமழை பொழிந்தனர்.. இருவர் கண்களிலும் கண்ணீர்.. இது துக்கமா? ஆனந்தமா? தன்னிலை மறந்தனர்.. உடலோடு உடலும் உயிரோடு உயிரும் கலந்தன.. இருவரும் மற்றவர் உடலில் அனுபவிக்காத

பாகமே இல்லை எனலாம்.. உடல்வழி, உயிர்வழி, வாய்வழி மனவழி என புணர்ந்து நாம் இருவரல்ல இனி ஒருவர் என்ற நிலையாயினர்.. வியர்வையில் குளித்தனர்... பால் மறந்து உறவாடினர்.. முடிவில்.. இருவர் கண்களிலும் ஆனந்த கண்ணீர்.. இவர்களின் உறவுக்கு ஒரு அச்சாணி இந்த ஒரு நிகழ்ச்சி... ஆம் பொதுவாகவே கணவன் மனைவி உறவுக்கு காமம் அச்சாணி என்பார்கள்.. அந்த அச்சாணி முறியும் பொழுது.. அந்த உறவும் பிரிந்துவிடும் முறிந்துவிடும் என்பதால்.. இப்பொழுது கதிர் மற்றும் முத்துவின் நிலையம் அதுதான்.. அவர்கள் போட்டுக்கொண்ட அச்சாணி தான் இந்த உறவு.. இருவரும் ஒருவரை ஒருவர் வாஞ்சையுடன் பார்த்துக்கொண்டனர்.. கதிர் முத்துவை நோக்கி.. முது நாம் செய்தது தவறா சரியா என்று நான் ஆராய்ச்சி செய்ய விரும்பவில்லை.. என்னை பொறுத்தவரை இது நம் உறவுக்கு அடித்தளம்.. இன்று முதல் நாம் தொடங்குவது புது வாழ்க்கை.. என்று சொல்ல.. முத்துவோ.. கதிர்.. இதையே தான் சொல்ல வந்தேன்.. இந்த உலகமே நமக்கு எதிரானாலும் நாம் ஒன்றாக இருக்க வேண்டும் கதிர்.. சத்தியமா சொல்லறேன் இனிமே நீ இல்லாம என்னால வாழவே முடியாது டா.. நீ இல்லைனா ஒண்ணு நான் செத்துடுவேன் இல்ல பையித்தியம் ஆயிடுவேன்..என்று சொல்ல.. முத்து நீ என்னை பிரிஞ்சிட்டேன்னு கேட்டவுடனேயே நான் போய்டிவேண்ட.. பையித்தியமா கூட என்னால நீ இல்லாம என்னால இருக்க முடியாது.. என்று சொல்ல இருவரும் ஆனந்த கண்ணீர் சிந்தி இருக்குய் அணைத்தவாறே உறங்கினர்..
புதுவாழ்க்கையை தொடங்கிய சந்தோஷத்தோடு தங்கள் கொடைக்கானல் பயணத்தை முடித்து.. சென்னை திரும்பிவர பேருந்தில் ஏறி அமர்ந்தனர்.. முத்துவும் கதிரும் அருகருகே அமர்ந்து கொள்ள முத்து கதிரன் தோள்களில் தலைசாய.. பேருந்து புறப்படுவதற்கு தயாராகி விளக்குகள் அணைக்கப்பட்டன.. இருவரும் கண்களை மூடி அங்கு நடந்த நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக அசைபோட்டனர்.. சிறிது நேரத்தில் முத்து கதிரின் தோள்களில் அப்படியே உறங்கிப்போனான்...
டிசம்பர் 19

சார்.. எழுந்திருங்க.. கடைசி ஸ்டாப் வந்துவிட்டது.. என்ற நடத்துனரின் குரல் கேட்டு முத்து எழுந்து கொண்டான்.. ஒருநிமிடம் தான் எங்கிருக்கிறோம் என்று கூட தெரியாமல் திணறினான்... கதிர் எங்கே.. கதிர்.. கதிர்.. யார் சார். உங்க கூட இருந்தாரே அவரா? அவர் அப்பவே இறங்கிட்டாரே என்று சொல்ல.. அப்பொழுது தான் முழு நினைவுக்கு வந்தவனாய்.. இல்ல சார் தாங்க்ஸ்.. என்று சொல்லிவிட்டு பேருந்தை விட்டு இறங்கினான்.. தனிமை வாட்ட.. துக்கம் தொண்டையை அடைக்க.. ஏதும் அறியாதவனாய் தனி மரமாய்.. நின்றான்.. இனி என்ன செய்வது? எங்கு போவது? ஐயோ எனக்கு பயித்தியம் பிடித்துவிடும் போல இருக்கே.. என்று நினைத்தவாறே.. அருகே இருந்த கல்லின் மேல் உட்கார்ந்தான்.. கடவுளே தவறு செய்தால் தண்டனை உண்டு சரி.. ஆனால் இந்த தண்டனை.. ரொம்ப கொடியது.. என்னால முடியல.. என்ற எண்ணம்.. அவனை மேலும் துக்கம் கொள்ள செய்தது.. கண்களில் காவேரி ஜலப்ரவாகம் செய்ய.. அங்கோ.. கதிர்.. இனி வாழ்ந்தது பயனில்லை.. இனி முத்து இல்லாமல் வாழ்வும் இல்லை.. நாம இன்னும் கொஞ்சம் பொறுமையா இருந்திருக்கலாமோ.. அவசரப்பட்டுவிட்டோமோ என்ற குழப்பத்தில்.. ஒரு முடிவை தேடி கால் போன பாதையில் நடந்தான்.. ஒருவரை ஒருவர் தங்கள் இதயத்தில் தாங்கியவாறே வெவ்வேறு திசைகளில் தங்கள் முடிவை நோக்கி நடந்தனர்..
இன்று..
முத்துவின் தொலை பேசிக்கு தொடர்ந்து தொடர்பு கொண்டே இருந்தார் கதிரன் தந்தை... கடைசியாக ... இல்லை இல்லை முதல் முறையாக எதிர்முனையில் அழைப்பு மணி ஒலித்தது.. எதிர் முனையில் யாருங்க.. சார் நான் கதிரோட அப்பா பேசறேன்.. என்றதும்.. என்ன சார் என் பையான் இருக்கான இல்லையானு பார்க்க போன் பண்ணினீங்களா? என்று கோவத்துடன் கேட்க.. கதிரன் அப்பவோ.. இல்ல சார்.. இல்ல.. எனக்கு எதுவுமே தேராது.. கதிர் இங்க சித்தபிரம்ம புடிச்சி இருக்கான்.. என்ன ஆச்சின்னே தெரியல.. என்ன நடக்குது..உங்களுக்கு ஏதாவது தெரிஞ்ச

சொல்லுங்க.. என்று ஆவலும் ஆதங்கமும் பொங்கிய குரலில் கதிரன் அப்பா சொல்ல.. முத்துவின் அப்பவோ.. என்ன சார் சொல்லறீங்க..என்று அதிர்ச்சி அடைய.. இரு குடும்பமும் ஒன்றும் புரியாமல் முழித்தனர்.. சார்.. முத்துவை சுயநினைவில்லாத நிலையில் மைசூர் போரவழியிலிருந்து பார்த்து மருத்துவமனையில் சேர்த்து பிறகு காண்டக்ட் நம்பர்ஜ பார்த்து எங்களை அழைத்தனர்..கதிர் எப்படி..? தெரியல சார்.. எனக்கும் போன் வந்து தான் நானும் போனேன். ஆனா அங்கே நான் பேசறது கூட புரியாம.. கண்மூடாம சாப்டாம ஒரு ஜடமா உட்கார்ந்து இருந்தார் சார்.. என்ன ஆச்சு இவங்களுக்கு.. நம்ம பேச்சை கேட்காம நடைமுறைக்கு சரிபட்டுவராத ஒரு உறவை இவங்க தேர்ந்தெடுத்தாங்க.. ஆனா இத பார்ப்பதற்க்கா.. என்று தொலை பேசியிலே கதற.. இங்கு டாக்டர் சொன்னதை முத்துவின் தந்தையுடன் சொல்ல.. நான் கண்டிப்பா கூட்டிண்டு வரேன் சார்.. என்று சொல்லி அழைப்பை துண்டித்தார்... கதிரன் அப்பாவிற்கு குழப்பம் அதிகமாகியது.. எதனால்? இருவரும் எதனால் இந்த முடிவிற்கு வந்தனர்.. என்ன நேர்ந்தது..யாரால் இதற்க்கெல்லாம் விடை சொல்ல முடியும்? கடவுளே இதெல்லாம் பார்பதற்க்க என்னை இன்னும் உயிரோடு வைத்திருக்கிறாய்..என்று எண்ணியவாறே வீட்டை அடைந்தார்.. அனைவரின் வருகைக்காகவும் காத்திருந்தார்..

அங்கே மருத்துவர்கள் கதிரை பரிசோதனை செய்ய ஆரம்பித்தனர்.. முத்துவிற்கு லேசாக நினைவு திரும்பியதாக தெரிந்தது..

டிசம்பர் 19

ஏதோ தோன்றியவனாய் நேராக கதிரை பார்க்க புறப்பட்டான். கடைசியாக அவனிடம் ஒருமுறை மன்னிப்பு கேட்டுவிட்டு என் வாழ்க்கையை முடித்துக்கொள்கிறேன் என தனக்குள்ளே சொல்லிக்கொண்டு ஆட்டோவை கூப்பிட்டான். உட்கார்ந்து போகவேண்டிய இடத்தை சொல்லி தலை சாய்த்துக்கொண்டான். கடவுளே.. கதிர் என்னை மன்னித்து என்னுடன் வந்துவிடுகிறேன்னு ஒருமுறை சொல்லட்டும் இந்தஜென்மத்திலே மட்டும் அல்ல எந்த ஜென்மத்திலும் நான் அவனை காயபடுத்தவோ இழக்கவோ மாட்டேன். ஒரே ஒருமுறை எனக்கு அந்த வாய்ப்பு தருவாயா? கதிர் என்னை ஏத்துப்பானா? என்ற கேள்விகளுடனேயே கதிரின் வீட்டை அடைந்தான்.. ஏமாற்றமே அவனுக்கு மிஞ்சியது. கதிரும் இல்லை அவன் ரூம் மேட்டும் இல்லை.. மிகுந்த ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான். கதிரும் அலைந்து திரிந்து எந்த ஒரு முடிவும் எடுக்க இயலாமல் வீடு திரும்பினான். இருவருக்கும் நாட்கள் போவதாகவே தெரியவில்லை.. கதிருக்கு அலுவலகத்திலும் வேலை செய்ய முடியவில்லை.. குழப்பம்.. கோவம் வருத்தம்.. சோகம்.. எல்லாம் ஒருசேர இருவரையும் வாட்டியது.. வாழவே விருப்பமில்லாமல் வாழும் மனிதர்களானார்கள். இரண்டு மூன்று தினங்கள் கடந்தன.. முத்து ஒரு முடிவெடுத்தவனாய் ப்ரொவ்சிங் சென்டர் சென்றான்.. ஒரு வாழ்த்து அட்டையை எடுத்தான்..கடைசியாக கதிருக்கு ஒரு கடிதத்தை வரைந்தான்.. அதில்...என் உயிர் கதிருக்கு..முத்துவின் கடைசி கடிதம்.. ஆம்.. இனி உன்னை பார்ப்பேன் என்று எனக்கு நம்பிக்கை இல்லை.. உன்னை இழந்து இந்த நரகத்தில் வாழ்வதைவிட மரணத்தின் வலி தாங்கக்கூடியது தான்.. ஆம் இதை நீ படிக்கும் வேளையில் என் உயிர் கண்டிப்பக பிரிந்திருக்கும்.. நான் பெங்களூரை விட்டு செல்கிறேன்.. எங்கே என்பது எனக்கே தெரியாது.. ஆனால் என் முடிவை தேடி செல்கிறேன் என்பது மட்டும் எனக்கு தெரியும். கருதொருமித்தவர்களாக வாழ்ந்த நாம் விதி வசத்தால் அலைகழிக்கப்பட்டோம். இல்லை.. நான் உன்னை அலைகழித்தேன். உன்னை வெகுவாக நோகடித்தேன்.. உன்னை துன்புறுத்தினேன்.. எல்லாவற்றிற்கும் ஒரே ஒரு காரணம் தான் கதிர்.. சந்தேகம். என்னை வேலையை விட்டு அனுப்பிவிட்டார்கள் என்று நான் சொன்னது பொய். நானாகத்தான் வேலையை விட்டேன். காரணம் சந்தேகம். அந்த சந்தேகமும் வசந்த்தினால் தான்.. திடீரென்று அவனுடைய வருகையும்.. நீ அவனுடன் நெருங்கிபழகிய விதமும் என்னை சந்தேக பட வைத்தது.. உன்மேல் எனக்கு முழுக்க முழுக்க நம்பிக்கை உண்டு கதிர்..

ஆனால் வசந்த் மேல் இல்லை.. என்னுடைய இந்த எண்ணம் தவறு தான்.. வேண்டும் என்றே தான் நான் எல்லாவற்றையும் செய்தேன்.. உன்னுடைய உண்மையான அன்பை சந்தேகப்பட்டது

தவறு என்று புரிந்துகொண்ட பொழுது நீ என்னை விட்டு விலகிவிட்டாய்.. என்னுடைய தவறை மன்னிக்க சொல்லி கேட்ககூட எனக்கு ஒரு வாய்ப்பு இல்லாமல் போனது.. எந்த ஒரு உறவுக்கும் பகை.. சந்தேகமே.. இதை நான் புரிந்து கொண்டேன்.. ஆனால் இதை நான் அடுத்த ஜென்மத்தில் கண்டிப்பாக செய்யமாட்டேன். எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நான் உன்னுடனேயே இருக்க விரும்புகிறேன். உன்னால் முடிந்தால் என்னை மன்னித்துவிடு.. எனக்காக அழாதே.. உன்னை தனியாக விட்டுவிட்டு போகிறேன் என்ற ஒரே வருத்தத்தை தவிர சந்தோஷமாக நான் போகிறேன். உன்மடியில் என் உயிர் பிரிந்திருந்தால் நான் மிகுந்த சந்தோஷம் அடைந்திருப்பேன்.. அந்த குடுப்பனை எனக்கில்லை.. ஆனால் என் உடலாவது உன்மடியில் இருந்தால் நான் சந்தோஷ படுவேன். அதற்கும் சாத்தியத்தை கம்மிதான். என்னை மன்னித்துவிடு.. பெற்றோரையும் உற்றோரையும் விட்டு நாம் இருவரும் வீட்டை விட்டு வெளியே வந்தபொழுது எடுத்த சத்தியத்தை நான் உடைத்துவிட்டேன்.. என்னை மன்னித்துவிடு.. இதை எழுதும் பொழுது நான் அழவில்லை கதிர்.. நீயும் அழாதே.. இது சந்தேகபடுபவர்களுக்கு ஒரு பாடம்.. நான் வருகிறேன்....உன்னை என்றுமே நேசிக்கும்.. முத்து..இதை எழுதிவிட்டு மறுநாள் கதிரை அடையும் படி செய்துவிட்டு கிளம்பினான்.. கால்வலிக்க நடந்தான்.. எத்திக்கில் என்று தெரியாமல்.. மறுநாள் கதிர் தன் அலுவலகத்தில் வேலை முடித்து வீட்டிற்கு கிளம்பும் பொழுது தன்னுடைய இ மெயில்ஐ செக் செய்ய திறந்தான்.. முத்துவிடமிருந்து வாழ்த்து அட்டை.. துள்ளிக்குதித்தான். அவசர அவசரமாக அதை திறந்தான்.. இனி கவலை இல்லை.. நான் என் முத்துவிடமே சென்டுவிடுவேன் என்ற சந்தோஷத்தில் திறந்த கதிருக்கு அந்த அட்டை அவன் வாழ்வின் பேரதிர்ச்சியை கொடுத்தது. அவனுடைய கனவுகள் எல்லாம் கலைந்தன.. இடிந்து விழுந்தான்.. தன் வாழு முடிந்ததை நினைத்த பொழுது பேசும் சக்தியை இழந்தான்.. முத்தில்லாத இந்த உலகத்தில் வாழ்வதை நினைக்கும் பொழுது நினைக்கும் ஆற்றலை இழந்தான்... ஒரு நடை பிணமானான்...
**<u>கடைசி இரண்டு போஸ்டிங்கில் ஆரம்பம் டிசம்பர் 19 என்றிருக்கும். அதை டிசம்பர் 19 க்கு பிறகு என்று வாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்</u>**.

இன்று..

சுயநினைவு வந்தாலும் அவனால் எதுவும் யோசிக்க கூட முடியவில்லை.. கண்களை திறக்க முடியவில்லை.. அவன் எங்கிருக்கிறான் என்று கூட தேறாத நிலை.. உண்மையில் இன்னும் மயக்க நிலை இருக்கவே செய்தது.. அவன் கண்களை மூடினான். கண்ணெதிரே கதிர் பேச முயன்றான்.. ஆனால் அவன் பேசுவது கதிருக்கு கேட்டதாக தெரியவில்லை..பிறகு தான் தெரிந்தது அது அவனுடைய பழைய நினைவுகள் என்று.. மீண்டும் அவன் தன பழைய நினைவுகளுக்குள் சென்றான்..

கொடைகானலிலிருந்து வந்தபிறகு இவர்களுடைய அன்னோன்யம் கூடியது.. மற்றவர் பார்த்து கேலி செய்யும் படி அல்ல.. எல்லோரும் பார்த்து பொறாமை படும்படி. ஒருவருக்காக மற்றொருவர் விட்டுக்கொடுத்து வாழ்ந்தனர்.. இரண்டாம் ஆண்டு முடிந்து மூன்றாம் ஆண்டு நிறைவு பெரும் தருவாயில்.. கதிர்.. இன்னும் ரெண்டு மாசத்திலே எக்ஸாம் எல்லாம் முடிஞ்சிடும்.. நாம நம்ம உண்மையான வாழ்க்கையை தொடங்கணும்.. நமக்குன்னு குடும்பங்கள் இருக்கு.. அவர்களையும் காப்பாத்தணும்.. இந்த களேபரத்திலே நாம பிரிஞ்சிட கூடாதுடா. அதை நினைத்தாலே எனக்கு பயமா இருக்கு என்று முத்து சொல்ல.. கதிரோ.. பயப்படாதேடா.. நாம ரெண்டு பேருமே ஒண்ணா ஒரே இடத்திலே வேலைக்கு போவோம்.. பார்ட் டைம் ல வேற நல்ல கோர்ஸ் எடுத்து படிப்போம்.. நாம நம்மளோட காலையே நின்னு நம்ம குடும்பத்தையும் காப்பாத்துவோம் என தைரியம் கூற.. முத்துவும் கண்ணனை கொண்டதினால் யசோதை அடைந்த இன்பத்தைவிட அதிக இன்பம் அடைந்தான்.. இருவரும் முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்றனர். ஒரு பி பி ஒ நிறுவனத்தில் இருவரும் வேலைக்கு சேர்ந்தனர்... குடும்பங்களும் இவர்களுடைய உறவில் மகிழ்ந்தது மட்டுமல்லாது நிலையம் உயர ஆரம்பித்தது.. கதிர் முத்து வீட்டிலும் முத்து கதிர் வீட்டிலும் தங்குவது இப்பொழுதெல்லாம் சாதாரணமான ஒரு விஷயம்.. அப்படி ஒரு நாள்

கதிர்வீட்டில் இருவரும் இருக்கும் பொழுது.. இரவில் எதேற்சியாக இவர்கள் இருவரையும் காணக்கூடாத கோலத்தில் கண்ட கதிரின் அம்மா அதிர்ந்து போக.. இருகுடும்பமும் அதிர்ச்சியில் உறைந்திருந்தனர். கதிரும் முத்துவும் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இல்லை.. அப்பொழுது தான் முத்து தாங்கள் இனி தனித்துவாழப்போவதாக கூறி கதிரையும் அழைத்துக்கொண்டு கிளம்பினான். அவன் கூறிய வார்த்தைகள் இதுதான்..
உங்களுடைய பார்வைக்கு மட்டுமல்ல இந்த உலகத்துடைய பார்வைக்கும் இது தப்பா தான் தெரியும் அப்பா.. ஆனா எங்களுக்கல்ல... இது நாங்களா தேடிகிட்டதல்ல..
இது நாங்களா தேடிகிட்டதல்ல.. தானா அமைஞ்சது.. முதல்ல நாம இத மாதிரி சந்திச்சப்போ சத்தியமா எங்களுக்குள்ளே ஒண்ணுமே இல்லே.. ஆனா இப்ப நாங்க ஒண்ணா ஆயிடும். கல்யாணம் என்ற பெயரில் நாங்கள் பிரியவோ.. இல்ல உங்கள ஏமாற்றவோ விரும்பவில்லை.. இதனால இரண்டு பெண்கள் வாழ்க்கை தான் பாதிக்கும்.. எங்களுடைய இந்த உறவு உங்களுக்கு மனத்தாங்கலையோ அவப்பெயரையோ தரும்ன்னு நீங்க நினைத்தால்.. நாங்க இப்பவே கிளம்பறோம்.. உடலளவில் உங்களை பிரிஞ்சிருப்போமே தவிர மத்தளவில் உங்களோடு தான் வாழுவோம்..எங்கள் கடமையிலிருந்து என்றைக்கும் நாங்கள் தவற மாட்டோம்..கதிர் வா போகலாம்..என்று கதிரை அழைத்துக்கொண்டு கிளம்பிய அந்த நினைவிலேயே.. கதிர் வா போகலாம்.. என்னடா நிக்கற வா போகலாம் என்று காத்த.. மருத்துவர்கள் வந்து தங்கள் சிகிச்சையை தொடர்ந்தனர்..
இங்கே..கதிர்க்கு சிகிச்சை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் தெரிந்து கொண்டது PMD Psychotic major depression chronic stage . anti-depressant and anti-psychotic medication ஆகிய சிகிச்சை முறைகளை கையாண்டனர்.. இரண்டு நாட்களுக்கு பிறகும் எந்த முன்னேற்றத்தையும் அவர்களால் பார்க்க முடியவில்லை. கதிரின் தந்தையை அழைத்து அவர் சொன்ன நபர்களா வந்தார்களா இல்லையா என விசாரித்தனர்.. அந்த வார கடைசியில் நிலேஷ் வந்தான்.. கதிர் சிலதினங்களுக்கு முன்பு தான் வந்ததாகவும் வந்ததிலிருந்தே அவன் சோகமாகவும் எப்பொழுதும் அழுதுகொண்டே இருந்ததாகவும் சொன்னான்.. முத்துவை பற்றியும் கூறவே.. அவர்கள் முத்துவை சந்திப்பது மிகவும் உபயோகமாக இருக்கும் என்று உடனடியாக அவனை அழைத்துவரச்சொல்லி கதிரின் தந்தையிடம் கூறினார்.. அவரோ அங்கு முத்துவின் நிலையை பற்றி கூறியவுடன்.. உண்மையாகவே அதிர்ந்துதான் போனார்கள் மருத்துவர்கள்.. இப்பொழுது அவர்களுக்கு புரிந்தது. கதிரை பெங்களூருக்கு அழைத்து சென்று அதே மருத்துவமனையில் சிகிச்சை செய்ய ஏற்ப்பாடு செய்தனர்.. அடுத்த நாள் அங்கு சென்றனர்.. தன் நினைவிலிருந்து அடிக்கடி தவறிக்கொண்டிருந்தான் முத்து. அதாவது.. தான் வாழ்ந்த அந்த இனிமையான காலங்களைவிட்டு வெளியே வர மனமில்லாதவனாய் மீண்டும் மீண்டும் நினைவிழந்தான். சினிமாவிலே காட்டுவதுபோல் கதிரை அந்த மருத்துவமனையின் உள்ளே அழைத்து வரும் பொழுது முத்து தன் படுக்கையிலிருந்து எழுந்து கதிர் வாட.. நாம போகலாம் வாட.. என்று கூறிக்கொண்டே கீழே விழுந்தான்.. இதைத்தான் பாசம், நேசம், அன்பு, காதல் கருதொருமித்தல் என்பதோ..முதல் முறையாக கதிரிடமிருந்தும் சில அசைவுகள்.. நம்பிக்கை வந்தது மருத்துவர்களுக்கு.. அன்பிற்கு என்ன சக்தி என்பது எல்லோருக்கும் புரிந்திருக்கும் இப்பொழுது.. இருவரையும் ஒரு அறைக்கு மாற்றினர்.. நினைவில்லாமல் முத்து கத்துவது கதிரின் காதில் விழட்டும் என்று.. பலன் வந்தது.. திடீரெண்டு முத்து கதிர் வாட போகலாம் வாடா என்று கத்த முத்து என்று கதறிக்கொண்டே வெளியே ஊட முயற்சித்த கதிர் உடலில் பலமில்லாமல் தரையில் விழுந்தான். இரண்டு குடும்பமும் தங்கள் வாரிசுகளும் நிலை கண்கொண்டு கண்ணீர் சிந்த மட்டுமே முடிந்தது.. இவ்வளவிலும் ஒருவர் மீது மற்றோவர் வைத்துள்ள அன்பைக்கண்டு அந்த மருத்துவமனையில் கண்ணீர் வடிக்காதவர்கள் யாரும் இல்லை. இப்பொழுது கதிரும் தன் நினைவை கொஞ்சம் கொஞ்சமாக இழக்க ஆரம்பித்தான்.

மருத்துவர்கள் இருவரையும் அருகருகே படுக்கவைத்தனர்.. இது மருத்துவ விதிக்கு புறம்பானாலும். இது அன்பால் மட்டுமே தீர்க்கக்கூடிய ஒரு நோய். ஒன்று பாட்ட மனங்களுக்கு அவர்களது அன்பு தான் ஒரே மருந்து. கதிர் முத்து தன் அருகில் இருப்பத உணர்ந்தவன் போல முத்து முத்து என்ன மன்னிச்சிடுடா.. நன் உன்னைவிட்டுட்டு போகமாட்டேன்.. சாரி டா என்று சொல்ல.. முத்துவோ.. கதிர் வாடா போகலாம் வாடா போகலாம் என்று சொல்ல.. இருவரும் எழுந்துகொள்ள முயற்சிக்க.. தன் அருகே முத்துவை பார்த்த கதிர்.. முத்து முத்து என்னடா ஆச்சு.. பாருடா.. முத்து பாருடா என ஈன ஸ்வரத்தில கதற.. கதிரின் ஸ்பரிசம் பட்டு முத்து மெதுவாக தன் கண்களை திறந்து பார்த்தான்.. கதிர் தன் அருகே இருப்பதை பார்த்த முத்து அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.. முத்துவை உயிருடன் பார்த்த அந்த கணமே கதிர்.. அவனை கட்டி அணைத்து அவனுக்கு சக்தியை தந்தான்.. கதிரும் மிகவும் க்ஷீனிதிருந்ததால் மருத்துவர்களும் தங்கள் சிகிச்சையை தொடர்ந்தனர்.. ஒருவாரம் கழித்து இருவரும் வீடு வந்தனர்.. இரு குடும்பமும் இவர்களை மனதார அங்கீகரித்தது..
நண்பர்களே.. மேலே நான்முடித்தவிதம் எல்லோரும் ரசிக்க..
ஆனால் உண்மை அதுவல்ல.. இது உண்மையாக நடந்த ஒரு நிகழ்ச்சி..இதற்க்கு மாறானது.. நான் முதலில் எழுதியது நடந்த நிகழ்ச்சி.. இதோ..
கதிர் முத்து தன் அருகில் இருப்பத உணர்ந்தவன் போல முத்து முத்து என்ன மன்னிச்சிடுடா.. நன் உன்னைவிட்டுட்டு போகமாட்டேன்.. சாரி டா என்று சொல்ல.. முத்துவோ.. கதிர் வாடா போகலாம் வாடா போகலாம் என்று சொல்ல.. இருவரும்அப்படியே அடங்கினர்.. ஆம்.. இருவரும் ஒருவர் நினைவில் ஒருவர் கலந்து ஒருவர் வாழ்வில் ஒருவர் கலந்து இறப்பிலும் ஒன்று கலந்தனர்.. அவர்களின் பிரிவை அவர்களே ஆற்றோனாது அந்த இயற்கையோடு கலந்தனர் என்றும் இணைபிரியாமல் வாழ்வதற்கு..
இவர்களுக்கு ஏன் இந்த நிலைமை.. சொல்லாதே யாரும் கேட்டால்..

முற்றும்
நன்றி